# இடைநிலைக் கல்வி

# தமிழ் (237)

## இடுபணி (TMA)

## (TUTOR MARKED ASSIGNMENT)

**மதிப்பெண் : 20**

*குறிப்பு : 1. எல்லா வினாக்களுக்கும் கட்டாயம் விடையளிக்கவும்.*

*2. பெயர், சுழல் எண் (ஒப்படைப்பு எண்), இடுபணி எண், பாட எண் ஆகியவற்றை விடைத்தாளில் முதல் பக்க முகப்புப் பகுதியில் எழுதுக.*

**1. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகியவிடையளிக்க. (1x2=2)**

அ. யார் இவ்வவுலகில் நீடு வாழ்வர்? *(விடை : தொ. 1; ப; 3)*

(அல்லது)

ஆ) எதிர்க்கப்படாத கலப்பு மணங்கள் யாவை? *(விடை : தொ; 1; ப;25)*

**2. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க. (1x2=2)**

அ) கணினியின் பல்திறன் பற்றி எழுதுக. *(விடை: தொ;1, ப;73)*

(அல்லது)

ஆ) ஆனைமடு - பெயர்க்காரணம் கூறுக. *(விடை: தொ; 1, ப; 120)*

**3. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (40 முதல் 60 சொற்களுக்கு மிகாமல்) குறுகிய விடையளிக்க. (1x2=2)**

அ) நீவிர் விரும்பிப் படித்த புலவர் ஒருவரின் கவிதையில் உள்ள சொல்லாட்சித் திறனை விவரிக்க.

*(விடை: 13:2 பாடத்தைப் படித்து, பாரதி, பாரதிதாசன், கவிமணி போன்ற கவிஞர்களின் கவிதைகளில் அமைந்துள்ள சொல்லாட்சித் திறனை மதிப்பிடுக.)*

(அல்லது)

ஆ) மகாத்மா காந்தியின் தனித்தன்மைகள் யாவை? *(விடை:* தொ.1, ப:158)

4. **பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (100 முதல் 150 சொற்களுக்கு மிகாமல்) விரிவான விடையளிக்க.** **(1x4=4)**

அ) பழமொழி நானூறு கூறும் கல்வி பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக.

*(விடை: தொ2/ 22ஆம் பாடம் படித்து திரண்ட கருத்துகளை எழுதுக.)*

(அல்லது)

ஆ) மகாத்மா காந்தியின் தென்னாப்பிரிக்கப் பயணம் அவர் வாழ்வில் ஒரு திருப்புமுனை என்பதைப் பற்றிக் கட்டுரை எழுதுக.

*(விடை: தொ.2, 24ஆம் பாடச் செய்திகளைத் திரட்டி எழுதுக)*

5. **பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (100 முதல் 150 சொற்களுக்கு மிகாமல்) விரிவான விடையளிக்க.** **(1x4=4)**

அ) அசோகனின் அறச் செயல்கள் பற்றி எழுதுக.

*(விடை: தொ.2, ப.123)*

(அல்லது)

ஆ) நும்பாடப் பகுதியில் கணினி அறிமுகம் என்ற பகுதியைப் படித்து செய்திகளைத் திரட்டி எழுதுக.

*(விடை: தொ.1, ப.71 - 82)*

6. **பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்கு (500 சொற்களுக்கு மிகாமல்) விரிவான விடையளிக்க.** **(1x4=4)**

அ) வங்கி அல்லது அஞ்சல் துறையில் வேலை பார்க்கும் ஒருவரிடம் உரையாடி அவை மக்களுக்கு எவ்வாறு பயன்படுகின்றன என்பதைக் கட்டுரையாக எழுதுக.

*(விடை: தொ2, ப.191-209)*

(அல்லது)

ஆ) 'தமிழர் சிறந்த பண்பாட்டினைக் கொண்டவர்கள்' என்ற கூற்றினைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக நிறுவுக.

*(விடை: தொ. 2, ப.70-79)*